# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2026–2027

## எழுதுபொருள் மற்றும் அச்சு

### மானியக் கோரிக்கை எண். 30


# ராஜ்மோகன்

பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி,
செய்தி மற்றும் விளம்பரத் துறை
அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

## மானியக் கோரிக்கை எண்: 30
## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை
## எழுதுபொருள் மற்றும் அச்சு

### பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-2 |
| 2. | தோற்றமும் வளர்ச்சியும் | 2-3 |
| 3. | துறையின் நோக்கம் | 3-4 |
| 4. | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் அலகுகளின் விவரம் | 4-6 |
| 5. | பொது மக்கள் சேவை | 6-7 |
| 6. | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை – ஒரு கண்ணோட்டம் | 8-39 |
| 7. | 2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அச்சுப் பணிகளின் விவரம் | 40-48 |

| | | |
|---|---|---|
| 8. | 2025-2026 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருவாய் இனங்கள் | 49-55 |
| 9. | தொழிலாளர் நலன் | 56-63 |
| 10. | வரவு-செலவு | 64 |
| 11. | கழித்தொதுக்கம் | 65 |
| 12. | தகவல் பரவலாக்கம் | 66-67 |
| 13. | நிறைவுரை | 67-68 |

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை
# எழுதுபொருள் மற்றும் அச்சு
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2026-2027

## 1. முன்னுரை

கலை, இலக்கியம், அரசியல், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்புடைய சிந்தனைகளை ஏட்டில் ஏற்றி சமுதாய முன்னேற்றத்திற்கு தொடர்ந்து தனது பங்களிப்பினை ஆற்றி வரும் கலை அச்சுக் கலையாகும்.

சீனாவில் தொடங்கி, ஜெர்மனியில் இயந்திர வடிவம் பெற்று, ஐரோப்பியர்கள் வழியே இந்தியாவிற்குள் நுழைந்து தமிழகத்தில் தன் முத்திரையைப் பதித்தது அச்சுக் கலை.

தொழில்நுட்ப பரிணாமத்திற்கு உட்பட்டு தன்னை தகவமைத்துக் கொள்ளும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது, அரசு நிர்வாகத்தின் நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி, தமிழ்நாடு அரசின் வளர்ச்சிப் பயணத்தில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.

## 2. தோற்றமும் வளர்ச்சியும்

புனித ஜார்ஜ் கோட்டையில் அரசிதழ்களை அச்சிட்டு வெளியிட 10 பணியாளர்களுடன் 1831-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 அன்று தொடங்கப்பட்டு, செயல்பட்டு வந்த அச்சுத் துறையும், சென்னை மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் இருந்த எழுதுபொருள் பிரிவும் ஒன்றிணைக்கப்பட்டு, 1953-ஆம் ஆண்டு ஜூலை

மாதம் முதல் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக மாற்றப்பட்டு அனைத்து அரசுத் துறைகளின் அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 3. துறையின் நோக்கம்

அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் எழுதுபொருள் மற்றும் அச்சுத் தேவைகளை நிறைவு செய்வதே இத்துறையின் நோக்கமாகும். துறை சார்ந்த அறிவிக்கைகளை அச்சிட்டு மாநில மற்றும் மாவட்ட அரசிதழ்களில் வெளியிடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பல்கலைக்கழகம் / பள்ளிக் கல்வித் துறை தேர்விற்கான விடைத்தாள்கள், அரசு சார் நிறுவனங்கள், நீதித்துறை மூலம் வெளியிடப்படும்

நூல்கள் ஆகியவற்றை அச்சுக் கட்டணங்கள் பெற்று அச்சிட்டு அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப அரசு அச்சகங்களை நவீனப்படுத்தி, ஆவணங்களையும், நூல்களையும் உயர் தரத்துடன் துரிதமாகவும், செம்மையாகவும் அச்சிட்டு வழங்குவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**4. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் அலகுகளின் விவரம் :-**

| வ. எண். | அலகு | செயல்படும் இடம் |
|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை. | தங்க சாலை, வள்ளலார் நகர், சென்னை-600 001. |

| வ. எண். | அலகு | செயல்படும் இடம் |
|---|---|---|
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம் (கிடங்கு), சென்னை. | 64, இராஜாஜி சாலை, சென்னை-600 001. |
| 3. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | பொது அலுவலக வளாகம், சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை-622 001. |
| 4. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | உளுந்தூர்பேட்டை பிரதான சாலை, விருத்தாசலம்-606 002. |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி. | பிளாட் எண்.சி-9, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி- 620 015. |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம். | ஐந்து ரோடு, சிட்கோ வளாகம், சேலம்-636 004. |
| 7. | அரசு கிளை அச்சகம், மதுரை. | ரேஸ் கோர்ஸ் சாலை, கோ. புதூர், மதுரை-625 007. |

| வ. எண். | அலகு | செயல்படும் இடம் |
|---|---|---|
| 8. | அரசு கிளை அச்சகம், திருப்பூர். | திருப்பூர் மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம் எதிரில்,<br>கதவு எண்.497,<br>பல்லடம் சாலை,<br>திருப்பூர் – 641604. |

### 5. பொது மக்கள் சேவை

பொது மக்கள் தங்கள் தேவைக்கேற்ப பெயரினைத் திருத்தம் செய்தல் மற்றும் பெயரினை மாற்றம் செய்தல் ஆகியவற்றை அரசிதழில் வெளியிடும் சேவைகளை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரக வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் அல்லது அரசு கிளை அச்சகங்களில் பெற்றுக் கொள்ளும் வசதியுள்ளது.

இத்துறையின் இணைய வலைத்தளம் மூலமாக பொதுமக்கள் தங்களது பெயர் திருத்தம் / மாற்றம் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும். பெயர் திருத்தம் / மாற்றம் செய்து ஆங்கிலத்தில் அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.750/- பெயர் திருத்தம் / மாற்றம் செய்து தமிழில் அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.150/- கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் பாலினத்தவர் பெயர் திருத்தம் / மாற்றம் குறித்து கட்டணம் ஏதுமின்றி அரசிதழில் வெளியீடு செய்யப்படுகின்றன.

2025-2026-ஆம் ஆண்டில் 41,405 நபர்களின் பெயர் மாற்றம் குறித்த உரிய அறிவிக்கைகள் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

## 6. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை – ஒரு கண்ணோட்டம்


### 6.1. நிருவாக அமைப்பு

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் நிருவாக அமைப்பானது இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. தினசரி பணிகள் மற்றும் அரசின் கொள்கை முடிவுகளை நிறைவேற்றுவதில் இத்துறையின் பொது நிருவாகப் பணிகளை இணை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலரும் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளைப் பொது மேலாளரும் மேற்கொண்டு, ஆணையருக்கு உறுதுணையாக உள்ளனர்.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து வரவு-செலவு, கணக்கு மற்றும் தணிக்கை

பணிகளை மேற்பார்வையிட முதன்மை கணக்கு அலுவலர் ஒருவரும், அச்சுக் கட்டணங்களை நிர்ணயம் செய்யவும், தளவாடங்களை மதிப்பீடு செய்யவும் கணக்கு அலுவலர் ஒருவரும் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை உறுதி செய்ய தொழிலாளர் நலத் துறையிலிருந்து தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும், உதவித் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார்கள்.

# நிருவாக அமைப்பு


ஆணையர்
தொழில்நுட்பப் பிரிவு
கணக்குப் பிரிவு
நிருவாகப் பிரிவு
ஆணையரின் நேர்முக உதவியாளர்
அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை
பொது மேலாளர்
முதன்மைக் கணக்கு அலுவலர்
இணை இயக்குநர்
மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர்
உதவிப் பணிமேலாளர் (கொள்முதல்)
உதவிப் பணிமேலாளர் (படிவங்கள்)
விலை மதிப்பீட்டு கணக்கு அலுவலர்
துணை இயக்குநர்
உதவி இயக்குநர் (நிருவாகம்)
உதவி இயக்குநர் (இருப்பு சரி பார்ப்பு)
தொழிலாளர் நல அலுவலர்
உதவி இயக்குநர் (வெளியீடுகள்)
உதவி இயக்குநர்
உதவிப் பணிமேலாளர்
அரசு மைய அச்சகம், சென்னை
அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை
அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி
அரசு கிளை அச்சகம், சேலம்
அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்
அரசு கிளை அச்சகம், மதுரை
அரசு கிளை அச்சகம், திருப்பூர்
பணி மேலாளர்-I
பணி மேலாளர்-II
துணைப் பணி மேலாளர்

## 6.2. பணியாளர்கள் விவரம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட 4,870 பணியிடங்களில் தற்போது 577 பெண் பணியாளர்களும், 960 ஆண் பணியாளர்களும் ஆக மொத்தம் 1,537 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். இப்பணியாளர்களில் 229 பணியாளர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவார்கள்.

## 6.3. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் ஆணையரகத்தின் பணிகள்

(i) அச்சுப் பணிகளுக்குத் தேவையான காகிதங்கள், அட்டைகள், அச்சுப் பயன்பாட்டுப் பொருட்கள், நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள், இயந்திரங்களுக்கான உதிரி பாகங்கள், கணினிகள் மற்றும் இதர அலுவலக பயன்பாட்டுப் பொருட்களை, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும்

2000 ஆம் ஆண்டு விதிகளைப் பின்பற்றி கொள்முதல் செய்து அரசு அச்சகங்களுக்கு வழங்குவது.

(ii) இத்துறையின் மூலம் அச்சடிக்கப்பட்ட அரசு வெளியீடுகள், விதிப் புத்தகங்கள், நடைமுறை நூல்கள், மத்திய அரசின் சட்டப் புத்தகங்கள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், பொதுமக்கள் தங்கள் பெயரினை திருத்தம் / மாற்றம் செய்வது குறித்த அரசிதழ்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கான பணிப்பதிவேடுகள் ஆணையரக வளாகத்தில் உள்ள விற்பனை நிலையத்தில் விற்பனை செய்தல்.

(iii) அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களுக்கு அச்சுப் பணிகளை ஒதுக்கீடு

செய்து அதன் செயலாக்கத்தினை கண்காணித்தல்.

(iv) இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் மனித வள மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வது.

(v) அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அச்சுத் துறையின் அதிநவீன அச்சுத் தொழில்நுட்பங்கள் குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

(vi) 2025-2026 ஆம் நிதியாண்டில் 2,82,45,250 எண்ணிக்கையில் ரூ.6,80,84,479/- (ரூபாய் ஆறு கோடியே எண்பது இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து நானூற்று எழுபத்து ஒன்பது மட்டும்) மதிப்பில் பொதுத் தேர்தல் துறைக்கு,

வாக்காளர் சேர்க்கைக்கான தேர்தல் படிவங்கள், உறைகள் மற்றும் பிற இனங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 6,79,04,000 எண்ணிக்கையில் ரூ.19,94,79,699/- (ரூபாய் பத்தொன்பது கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது மட்டும்) மதிப்பில் அரசு தேர்வுகள் துறைக்காக இரண்டாம் ஆண்டு மேல்நிலை(+2) மற்றும் பத்தாம் வகுப்பு பொது தேர்வுகளுக்கான விடைத்தாள்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது.

## 6.4. அரசு எழுதுபொருள் (கிடங்கு) அலுவலகம், சென்னை

அரசு எழுதுபொருள் (கிடங்கு) அலுவலகமானது உதவி இயக்குநர் தலைமையில் சென்னை, இராஜாஜி சாலையில்

1953 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

**<u>மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்</u>**

(i) அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள், எழுதுபொருட்கள் மற்றும் கோப்பு அட்டைகள் ஆகியவற்றை இருப்பு வைத்து ஆண்டு தேவைப்பட்டியலின் அடிப்படையில் 67 அலுவலகங்களுக்கு கட்டணத்தின் அடிப்படையிலும், பிற அரசு அலுவலகங்களுக்கு கட்டணம் ஏதுமின்றியும் வழங்கப்பட்டு வருகின்றன.

(ii) மக்களவை தேர்தல், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தலுக்குத் தேவைப்படும் எழுது பொருட்கள் மற்றும் பல்வகைப் பொருட்களை அனைத்து

மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் விநியோகிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 6.5. அரசு மைய அச்சகம், சென்னை

அரசு மைய அச்சகமானது 1831-ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டையில் டிசம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1888-ஆம் ஆண்டு முதல் தங்க சாலையில் உள்ள கட்டடத்திற்கு (Mint Building) மாற்றப்பட்டது. தற்போது புதிய கட்டடத்தில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அச்சு இயந்திரங்களுடன் இயங்கி வருகிறது. இம்மைய அச்சகத்தில் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

## மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்

(i) இவ்வச்சகமானது அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து விதமான கமுக்கமான அச்சுப் பணிகளை வரவு-செலவு மற்றும் அதிரகசியப் பிரிவுகளில் மிகுந்த பாதுகாப்புடனும், இரகசிய தன்மையுடனும் அச்சிட்டு வழங்கிட ஞாயிற்றுக் கிழமை உட்பட வாரம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

(ii) நவீன அச்சு இயந்திரங்களைக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களுக்கு தேவையான கடிதத்தாள் கற்றை (Letter Pad), நிதிநிலை அறிக்கை, வரவு-செலவு ஆவணங்கள், அனைத்து அரசுத் துறைகளுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள், கொள்கை விளக்க குறிப்பு மற்றும் செயல்முறைத் திட்டம், அதிரகசியப் பணிகள்,

சட்டமன்றத்தின் பல்வேறு குழுக்களின் அறிக்கைகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கை குறிப்புகள் ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

(iii) தமிழ்நாடு அரசிதழ்கள், சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள், பல வண்ணங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஆண்டு அறிக்கைகள், பல வண்ண அரசு மாத நாட்காட்டி, நாட்குறிப்பேடுகள், உயர்நீதிமன்ற மாத நாட்காட்டி, பல்கலைக்கழக தேர்வுகளுக்கான விடைத்தாள்கள், அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்கான விடைத்தாள்கள், அரசு தொழில்நுட்ப கல்வித் துறைக்கான விடைத்தாள்கள் மற்றும் துணி வேய்ந்த உறைகள்,

அரசுத் தேர்வுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள், கால முறை வெளியீடுகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு, சமூகநலம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளுக்கான படிவங்கள், பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாள்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைக்குத் தேவையான புற நோயாளிகளுக்கான அட்டைகள் மற்றும் மருத்துவ புத்தகங்கள் ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

(iv) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

(v) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கைகள், படிவங்கள் மற்றும் வாக்குச் சீட்டுகள், பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிக்கைகள், படிவங்கள், புத்தகங்கள், கையேடுகள், சிறப்பு அட்டைகள், பல்வேறு அளவிலான உறைகள், பொது மக்களுக்கான வெளியீடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவை அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

(vi) புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கு 1.21 கோடி எண்ணிக்கையிலான E-Permit Slip மற்றும் 78 இலட்சம் எண்ணிக்கையிலான E-Transit pass அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**கொள்முதல் செய்து நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ள இயந்திரங்களின் விவரங்கள்:**

(அ) அரசு மைய அச்சகத்தின் தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் பொருட்டு நவீன

இயந்திரங்களை பயன்படுத்தி பல வண்ணப் பணிகளை (Multi Colour) விரைவாகவும் மற்றும் நேர்த்தியாகவும் அச்சிட ஏதுவாக ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் ஒரு Thermal CTP (Computer to Plate) இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிலுள்ளது.

(ஆ) சென்னை அரசு மைய அச்சகத்தில் செயல்பட்டு வரும் முன் அச்சுப் பிரிவில் பார்வைப்படிகள் எடுத்து ஒப்புதல் பெறவும், Natural Tracing Paper Output அச்சிடுவதற்கு தேவைப்படும் புதிய கணினிகள் 15 எண்ணிக்கைகள் மற்றும் 3 எண்ணிக்கைகளில் Uninterruptible Power Supply (UPS) ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(இ) முன் அச்சுப் பிரிவின் செயலாக்கத்திற்கு தேவைப்படும் Adobe CC மற்றும் Corel DRAW ஆகிய மென்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(ஈ) முன் அச்சுப் பிரிவில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளைச் செயலாக்கம் செய்வதற்கும், பார்வைப் படிகள் எடுப்பதற்கும், அரசிதழ் பணிகளில் ஒவ்வொரு நிலையிலும் அச்செடுத்து பிழைத்திருத்தம் செய்வதற்கும் A3 Size Monochrome Laser Printer இரண்டு எண்ணிக்கைகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(உ) பல வண்ண அரசு நாட்காட்டி, பல வண்ண உயர்நீதிமன்ற நாட்காட்டி மற்றும் பெரிய அளவிலான வண்ணப் பார்வைப் படிகள் அச்சிடவும், பல்வேறு வகையான காகிதத்தில்

குறைந்த எண்ணிக்கையிலான பிரதிகள் அச்சிடவும் 36" Large Format Plotter type Printer நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(ஊ) மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், அமைச்சர் பெருமக்களின் அலுவலகங்கள், அரசு துறை செயலாளர்களின் அலுவலகங்கள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு தேவையான முத்திரைகள் மற்றும் அரசுத் தேர்வுகள் துறைக்கான மந்தண இரப்பர் முத்திரைகள் சுற்றுச்சூழல் பாதிப்பின்றி (Eco friendly) செயலாக்கம் செய்வதற்கு Polymer Rubber Stamp Making Machine நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(எ) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Variable Data Printer -க்கான Drop on Demand (DOD) piezo Inkjet System CSPL 34 AE Print Head

கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(ஏ) வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு நான்கு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## 6.6. புதுக்கோட்டை அரசு கிளை அச்சகம்.

1883-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, இவ்வச்சகமானது 1949-ஆம் ஆண்டு முதல் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

## <u>மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்</u>

(i) இக்கிளை அச்சகத்தில் காவல் துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, சமூக நீதித் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆண்டுதோறும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் கட்டணமின்றி அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

(ii) மேலும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகைப் பிரிவுகளில் அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகரும் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு ஆறு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### 6.7. விருத்தாசலம் அரசு கிளை அச்சகம்.

இவ்வச்சகமானது 1961-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 1981-ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை

அச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

**<u>மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்</u>**

(i) இக்கிளை அச்சகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, பொதுப்பணித் துறை, தொழில் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுத் தேவைப் பட்டியலின் அடிப்படையில் கட்டணமின்றி விநியோகிக்கப்படுகின்றன.

(ii) கடலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கான

மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

காகித உருளைகளை வெப் ஆப்செட் இயந்திரத்தில் பொருத்துவதற்கு காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளுவண்டி (Hydraulic Reel Loading Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு நான்கு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

### 6.8. திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகம்.

இவ்வச்சகமானது திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியமங்கலம் தொழிற்பேட்டையில் 1965-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள்

துவங்கப்பட்டு 1990-ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

**மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்**

(i) இக்கிளை அச்சகத்தில் காவல் துறை, சிறைத் துறை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு தேவையான பொது படிவங்கள், தன்பதிவேடுகள், நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவைப்பட்டியலின் அடிப்படையில் கட்டணமின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(ii) திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகரும் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

அவசரப் பணிகளான பல்கலைக்கழக விடைத்தாள்கள், அரசு தேர்வு துறையின் விடைத்தாள்கள், அரசு அலுவலகங்களுக்கான பொது படிவங்கள், பதிவேடுகள், காவல், கல்வி மற்றும் மருத்துவத் துறைக்கான படிவங்கள் ஆகிய பணிகளை குறித்த நேரத்தில் செயலாக்கம்

செய்திட புதிய நிரலாக்க காகிதம் வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு இரண்டு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**6.9. சேலம் அரசு கிளை அச்சகம்.**

இவ்வச்சகமானது 1966-ஆம் ஆண்டு சேலம் குகைப் பகுதியில் தொடங்கப்பட்டு பின்னர், ஐந்து சாலையில் உள்ள "சிட்கோ" தொழிற்பேட்டையில் 1986-ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

**<u>மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்</u>**

(i) இக்கிளை அச்சகத்தில் அரசுத் தேர்வுகள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, காவல் துறை மற்றும் அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஒவ்வொரு ஆண்டின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் அச்சிட்டு கட்டணமின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(ii) சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

## கொள்முதல் செய்து நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ள இயந்திரங்களின் விவரம்

அ) இவ்வச்சகத்தில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் சிரமமின்றி, காகித உருளைகளை ஏற்றி, தாங்கி பிடிக்க நவீன வசதியுடன் கூடிய காற்று அடைப்பான் முறையில் செயல்படும் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆ) காகித உருளைகளை வெப் ஆப்செட் இயந்திரத்தில் எளிதாக பொருத்துவதற்கு காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளுவண்டி (Hydraulic Reel Loading Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இ) இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை

பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகரும் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

அரசு கிளை அச்சகம், சேலத்தில் செயல்பட்டு வரும் முன் அச்சுப் பிரிவில் பார்வைப்படிகள் எடுத்து ஒப்புதல் பெறவும், Natural Tracing Paper Output அச்சிடுவதற்கு தேவைப்படும் புதிய கணினிகள் இரண்டு எண்ணிக்கை மற்றும் பிரிண்டர் ஒரு எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**6.10. மதுரை அரசு கிளை அச்சகம்.**

இவ்வச்சகமானது 1976-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு மதுரை கோ.புதூரில், சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கிளை

அச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

## மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்

(i) இக்கிளை அச்சகத்தில் காவல் துறை, நீதித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டு தோறும் தேவைப் பட்டியலின்படி கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

(ii) மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி

ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

(iii) விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று துறை வாயிலாக விவசாயிகளுக்கு சான்று பெற்ற விதைகள் குறித்த காலத்திற்குள் விநியோகம் செய்ய ஏதுவாக, வெள்ளை மற்றும் நீல நிற விதைச் சான்றட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

**கொள்முதல் செய்து நிறுவப்பட்ட இயந்திரங்களின் விவரம்:**

அ) வெப் ஆப்செட் இயந்திரங்களில் சிரமமின்றி காகித உருளையை ஏற்றி தாங்கி பிடிக்க நவீன வசதியுடன் கூடிய காற்று அடைப்பான் முறையில் செயல்படும் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆ) இவ்வச்சகத்தில் உள்ள இயந்திரப்பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றி செல்ல ஹைட்ராலிக் நகரும் அடிமேடை (Hydraulic Pallet Trolley) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இ) இவ்வச்சகத்தில் தேர்தல் துறை, வருவாய்த்துறை, விதைச் சான்றட்டை மற்றும் பொதுவான பணிகள், நிலைப்படுத்தப்படாத பதிவேடுகள் / படிவங்கள் ஆகிய பணிகளை குறுகிய காலத்தில் உடனடியாக செயலாக்கம் செய்து அனுப்புகை செய்ய வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி 10 இலக்கம் கொண்ட கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஊ) அரசு கிளை அச்சகம், மதுரையில் செயல்பட்டு வரும் முன் அச்சுப் பிரிவில் பார்வைப்படிகள் எடுத்து ஒப்புதல் பெறவும், Natural Tracing Paper Output அச்சிடுவதற்கு தேவைப்படும் புதிய கணினிகள் மூன்று எண்ணிக்கை, பிரிண்டர் ஒரு எண்ணிக்கை மற்றும் UPS இரண்டு எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

உ) வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு நான்கு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## 6.11. திருப்பூர் அரசு கிளை அச்சகம்.

இவ்வச்சகமானது 2025 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு திருப்பூரில் இயங்கி வருகிறது.

இக்கிளை அச்சகத்தில் துணைப் பணி மேலாளர் தலைமை பொறுப்பில் உள்ளார்.

**<u>மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்</u>**

(i) மருத்துவத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை அலுவலகங்களுக்கான Med.I-45A (Primary Case Sheet) படிவங்கள் அச்சிட்டு ஆண்டு தோறும் தேவைப்பட்டியலின்படி கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

(ii) கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

## 7. 2025-2026 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்கள் மூலம் அரசு அலுவலங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அச்சுப் பணிகளின் எண்ணிக்கை விவரம்

### 7.1 நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள்/ பதிவேடுகள்/ உறைகள்/ மடிப்பு அட்டைகள்

| வ.எண் | துறைகள்/ அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | வணிகவரித்துறை ஆணையரகம் | - | 3,400 | - | - |
| 2. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையரகம். | 1,450 | - | 250 | - |
| 3. | நிதித்துறை | 2,400 | 8,722 | - | - |
| 4. | காவல்துறை | 8,68,878 | 9,46,991 | 1,75,000 | 7,000 |
| 5. | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை | 80,000 | 7,150 | - | - |
| 6. | போக்குவரத்து துறை | - | - | 60,00,000 | - |

| வ.எண் | துறைகள்/ அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| | ஆணையரகம் | | | | |
| 7. | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம் | 1,32,635 | 18,822 | 90,200 | 90 |
| 8. | சமூக நீதித்துறை | 7,43,865 | 51,759 | - | - |
| 9. | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம் | 50,000 | - | - | - |
| 10. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககம் | 1,10,000 | - | - | - |
| 11. | பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையரகம் | 59,550 | 5,050 | - | - |
| 12. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை | - | 7,000 | - | - |
| 13. | முன்னாள் படை வீரர்கள் நலத் துறை | 5,35,130 | - | - | - |
| 14. | நில சீர்த்திருத்தத் | 500 | - | - | - |

| வ.எண் | துறைகள்/ அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| | துறை. | | | | |
| 15. | பள்ளிக் கல்வித் துறை | 67,02,300 | 1,98,000 | 4,30,000 | - |
| 16. | தமிழ் வளர்ச்சித் துறை | - | 12,200 | - | - |
| 17. | இந்து சமய அறநிலையத் துறை ஆணையரகம். | - | 300 | - | - |
| 18. | நீதித்துறை | 23,65,500 | 1,12,394 | 10,500 | - |
| 19. | தலைமை செயலக துறைகள் | 1,07,000 | 3,700 | - | - |
| 20. | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை | 10,20,24,780 | 1,83,717 | - | - |
| 21. | பொதுப்பணித் துறை | 6,500 | 1,350 | | |
| 22. | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 1,67,64,800 | 70,000 | - | - |
| 23. | வேளாண்மை – உழவர் நலத் துறை | 39,71,000 | - | - | - |

| வ.எண் | துறைகள்/ அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| 24. | பொதுப்படிவங்கள்/ கருவூல படிவங்கள்/ காகித உறைகள் (அனைத்து அலுவலகங்களுக்கும் ஆனது ) | 20,14,281 | 3,92,386 | 1,60,529 | - |
| | **மொத்தம்** | **13,65,40,569** | **20,22,941** | **68,66,479** | **7,090** |

## 7.2. நிலைப்படுத்தப்படாத படிவங்கள் / பதிவேடுகள்/ உறைகள்/ மடிப்பு அட்டைகள்

| வ.எண் | துறைகள் / அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | தபால் உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆளுநர் அலுவலகம் மற்றும் அமைச்சரவை | 1,000 | 202 | 20,450 | 1,000 |

| வ. எண் | துறைகள் / அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | தபால் உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| 2. | மாநில சட்டமன்றம் | 74,31,787 | 35,205 | 90,650 | 35,065 |
| 3. | சமூக நீதித்துறை | - | 50 | - | - |
| 4. | கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை | - | - | - | 100 |
| 5. | வணிகவரித்துறை ஆணையரகம் | 850 | 1,500 | - | - |
| 6. | எரிசக்தி துறை | 2,600 | 600 | - | - |
| 7. | சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை | 2,800 | 500 | - | - |
| 8. | நிதித்துறை | 13,800 | 5,350 | 350 | 800 |
| 9. | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | 16,51,400 | 3,700 | - | - |
| 10. | பள்ளிக் கல்வித் துறை | 94,79,700 | 1,58,02,100 | 6,91,000 | - |
| 11. | நெடுஞ்சாலைத் துறை | - | 4,800 | - | - |
| 12. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை | 12,100 | - | 3,000 | - |

| வ.எண் | துறைகள் / அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | தபால் உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| 13. | உள் துறை | 13,200 | 8,650 | 8,500 | 3,000 |
| 14. | வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு வாரியம் | - | 1,905 | - | - |
| 15. | தொழில்துறை | 300 | 150 | 1,000 | 1,300 |
| 16. | சுற்றுலா, பண்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 4,000 | - | - | - |
| 17. | சட்டத்துறை | 14,648 | 125 | - | - |
| 18. | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 72,400 | 3,475 | - | 100 |
| 19. | மனித வள மேலாண்மைத்துறை | 1,02,530 | 1,13,470 | 10,000 | 1,10,550 |
| 20. | பொதுத்துறை | 7,70,70,341 | 11,86,474 | 3,95,900 | 1,600 |
| 21. | பொதுப்பணித்துறை | - | 16,000 | - | - |
| 22. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை | 3,900 | 6,500 | - | 300 |
| 23. | தமிழ் வளர்ச்சித் துறை | 5,281 | 6,11,038 | 190 | 25,750 |

| வ. எண் | துறைகள் / அலுவலகங்களின் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | பதிவேடுகளின் எண்ணிக்கை | தபால் உறைகள் | மடிப்பு அட்டைகள் |
|---|---|---|---|---|---|
| 24. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை | - | 1,000 | - | - |
| 25. | மாநில கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு | - | - | - | 2,00,000 |
| 26. | தடய அறிவியல் துறை | 50,000 | - | - | - |
| 27. | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை | 37,700 | 50 | 60,000 | - |
| | **மொத்தம்** | **9,59,70,337** | **1,78,02,844** | **12,81,040** | **3,79,565** |

## 7.3. அரசு அச்சகங்களில் பல்கலைக்கழகங்கள் / அரசு கல்வி நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அச்சுப் பணிகளின் விவரம்

| வ. எண் | பல்கலைக் கழகங்கள் / கல்வி நிறுவனங்கள் | விடைத் தாள்கள் | உறைகள் | புத்தகங்கள் | படிவங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | அண்ணா பல்கலைக்கழகம் | **58,75,000** | **5,18,000** | - | - |
| 2. | சென்னை பல்கலைக்கழகம் | 33,40,000 | - | - | - |
| 3. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | **42,69,000** | - | - | - |
| 4. | அழகப்பா பல்கலைக்கழகம் | 16,00,000 | - | - | - |
| 5. | அண்ணாமலை பல்கலைக்கழகம் | 8,00,000 | - | - | - |
| 6. | தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் | 2,00,000 | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் | 9,00,000 | 2,00,000 | - | - |
| 8. | மருத்துவக் கல்வி இயக்ககம் (செவிலியர் பட்டயம் / மருந்தியல் பட்டத் தேர்வு) | 24,000 | 7,000 | - | 1,000 |
| 9. | தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் | - | - | 100 | - |
| 10. | பாரதியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி | 10,000 | 3,000 | - | - |
| **மொத்தம்** | | **1,70,18,000** | **7,28,000** | **100** | **1,000** |

## 8. 2025-2026 ஆம் ஆண்டுக்கான ஈட்டப்பட்ட வருவாய் இனங்கள்

### 8.1 அரசு வெளியீடுகள் / பெயர் மாற்றம் செய்து அரசிதழ் வெளியீடுகள் / புத்தகங்கள் விற்பனை / தனியார் அறிவிக்கை வெளியீடுகள் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் விவரங்கள்:

<table>
<tr><th>வரிசை எண்</th><th colspan="2">பொருள்</th><th>வருவாய் (ரூபாயில்)</th></tr>
<tr><td>1.</td><td colspan="2">அரசிதழ்கள், அரசு வெளியீடுகள், துறை சார்ந்த புத்தகங்கள் விற்பனை</td><td>89,93,992</td></tr>
<tr><td>2.</td><td colspan="2">அறிவிக்கைகள் பிரசுரக் கட்டணம் வெளியீடு</td><td>36,51,666</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td colspan="2">பெயர் திருத்தம் / மாற்றம் தொடர்பான அரசிதழ் வெளியீடுகள்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>விற்பனை நிலையம், சென்னை</td><td>1,58,18,496</td></tr>
</table>

| வரிசை எண் | பொருள் | | வருவாய் (ரூபாயில்) |
|---|---|---|---|
| | துணை விற்பனை நிலையம், மதுரை | 45,37,510 | |
| | துணை விற்பனை நிலையம், திருச்சி | 9,86,910 | |
| | அரசு கிளை அச்சகம், சேலம் | 35,71,988 | |
| | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 8,83,718 | |
| | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 8,55,775 | |
| | அரசு கிளை அச்சகம், திருப்பூர் | 25,44,750 | 2,91,99,147 |
| மொத்தம் | | | 4,18,44,805 |

## 8.2. பல்கலைக்கழகம் / அரசு கல்வி நிறுவனங்களின் பணிகள் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் விவரம்

| வ. எண் | பல்கலைக் கழகங்கள் / கல்வி நிறுவனங்கள் | மொத்த அச்சுக் கட்டணம் (ரூபாயில்) | பெறப்பட்ட அச்சுக் கட்டணம் (ரூபாயில்) | எதிர்பார்க்கப் படும் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1. | அண்ணா பல்கலைக்கழகம் | 14,31,05,096/- | 14,31,05,096/- | - |
| 2. | அழகப்பா பல்கலைக்கழகம் | 3,40,87,148/- | 3,40,87,148/- | - |
| 3. | தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் | 41,42,928/- | 41,42,928/- | - |
| 4. | அண்ணாமலை பல்கலைக்கழகம் | 2,76,95,674/- | 2,76,95,674/- | - |
| 5. | சென்னை பல்கலைக்கழகம் | 13,09,44,847/- | 5,20,60,827/- | 7,88,84,020/- |
| 6. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 5,53,35,992/- | 5,53,35,992/- | - |
| 7. | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் | 3,04,89,226/- | 3,04,89,226/- | - |

| வ. எண் | பல்கலைக் கழகங்கள் / கல்வி நிறுவனங்கள் | மொத்த அச்சுக் கட்டணம் (ரூபாயில்) | பெறப்பட்ட அச்சுக் கட்டணம் (ரூபாயில்) | எதிர்பார்க்கப் படும் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 8. | அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி | 8,41,726/- | 8,41,726/- | - |
| 9. | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் | 1,42,828/- | 1,42,828/- | |
| | **மொத்தம்** | **42,67,85,465/-** | **34,79,01,445/-** | **7,88,84,020/-** |

## 8.3. அச்சுப் பணிகளின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் விவரம்

| வ. எண் | துறை / நிறுவனம் | அச்சுக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | சாலை போக்குவரத்து நிறுவனம் | 61,992 |
| 2. | இந்திய உணவுக் கழகம் | 19,149 |
| 3. | தேசிய சுகாதார இயக்கம் | 41,98,880 |
| 4. | தொல்லியல் துறை | 4,95,942 |
| 5. | நிலச்சீர்திருத்தத் துறை | 38,476 |
| 6. | மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் | 97,936 |
| 7. | வணிகக் கடல் சார் துறை | 4,04,805 |
| 8. | தமிழ்நாடு சிறுதொழில் கழகம் | 94,320 |
| 9. | இராஜீவ்காந்தி அரசு பொதுமருத்துவமனை | 4,62,407 |
| 10. | பொருளியல் மற்றும் புள்ளியல் துறை | 1,84,348 |

| வ. எண் | துறை / நிறுவனம் | அச்சுக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 11. | தமிழ்நாடு மாநில நீதித்துறை அகாடமி | 4,00,579 |
| 12. | சீர்மரபினர் நல வாரியம் | 2,29,183 |
| 13. | டாக்டர்.தர்மாம்பாள் அரசு பாலிடெக்னிக் கல்லூரி | 1,56,047 |
| 14. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை | 14,80,855 |
| 15. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | 21,335 |
| 16. | தமிழ்நாடு நகர்புற வாழ்வியல் மேம்பாட்டு வாரியம் | 5,23,543 |
| 17. | எண்ணூர் அனல் மின் நிலையம் | 43,365 |
| 18. | தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகம் | 11,718 |

| வ. எண் | துறை / நிறுவனம் | அச்சுக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 19. | தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி கழகம் | 43,365 |
| 20. | தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் நதிகள் மறுசீரமைப்பு கழகம் | 36,376 |
| 21. | விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறை | 38,09,520 |
| 22. | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை | 34,27,488 |
| 23. | மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் (செவிலியர் / மருந்தியல் பட்டயத்தேர்வு) | 21,94,794 |
| **மொத்தம்** | | **1,84,36,423** |

## 9. தொழிலாளர் நலன்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் உள்ள அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன்படி நிர்வகிக்கப்பட்டு வருகிறார்கள். அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் நலச் சட்டங்களான 1923-ஆம் வருட பணியாளர் இழப்பீட்டு சட்டம், 1926-ஆம் வருட தொழிற்சங்க சட்டம், 1947-ஆம் வருட தொழில் தகராறுகள் சட்டம், 1972-ஆம் வருட தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் இதர சட்டங்களின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காத்திட, தொழிலாளர் நலத் துறையில் இருந்து தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும்,

தொழிலாளர் துணை ஆய்வாளர் நிலையில் உதவி தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் (Deputation) பணிபுரிந்து வருகின்றனர்.

**அ) தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள் (Allowances):**

1. 1923-ஆம் ஆண்டு பணியாளர்கள் இழப்பீடுச் சட்டப்படி விபத்து நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது.

2. தொழிலாளர்களுக்கு சீருடை, தையல் கூலி மற்றும் இதர படிகள் வழங்கப்படுகிறது. பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வருடந்தோறும் இரு மேலங்கிகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.700/- ஆண் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நான்கு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.2000/- வழங்கப்பட்டு வருகிறது.

3. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் போது பாதுகாப்பு நலன் கருதி ஷூ, காலுறைகள், காலணிகள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

4. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை காவலர், மின் வினைஞர் மற்றும் கடித தூதுவர்களுக்கு (Messenger) மழைக்கோட்டு வழங்கப்பட்டு வருகிறது.

5. அச்சகப் பணியாளர்களுக்கான மாதாந்திர ஊதியப் பட்டியலில் சிற்றுண்டிப் படியாக ரூ.400/- சலவைப் படியாக ரூ.200/- மற்றும் இடர்படியாக ரூ.400/- வழங்கப்பட்டு வருகிறது.

**ஆ) சிறப்பூதியம்**

ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரசு விடுமுறை தினங்களில் அவசர மற்றும் முக்கியத்துவம்

வாய்ந்த அச்சுப் பணிகள், வரவு-செலவு திட்டம் மற்றும் அதிரகசிய பிரிவில் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முதுநிலை முதலாளுக்கு ரூ.300/- தலைமை முதுநிலை முதலாளுக்கு ரூ.240/- ஒழுங்கமைப்பாளர், இளநிலை முதலாள், முதுநிலை தனியச்சு வார்ப்புப் பணியாளர், இளநிலை வாசகர் ஆகியோருக்கு ரூ.210/- இளநிலை புத்தகம் கட்டுநர், இயந்திர இயக்கி, அசல் படிப்பவர் ஆகியோருக்கு ரூ.180/- மற்றும் கிடங்கு எழுத்தருக்கு ரூ.120/- மாதந்தோறும் சிறப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**இ) மனமகிழ் மன்றங்கள்**

தொழிலாளர்களின் நலன் கருதி பணியாளர்களின் பணித் திறனை மேம்படுத்திட எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் அனைத்து அலுவலகங்களிலும் மனமகிழ் மன்றம்

ஏற்படுத்தப்பட்டு, மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற ஆர்வமுள்ள பணியாளர்களை (ஆண் மற்றும் பெண் பணியாளர்கள்) அனுப்புதல், யோகா மற்றும் தியானம் குறித்த பயிற்சி அளித்தல், கலை இலக்கிய பயிற்சிகள் அளித்தல் மற்றும் இதர விளையாட்டு போட்டிகள் நடத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பணியாளர்களுக்கு விளையாட்டு மற்றும் உடல் நலன் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட தேவையான, விளையாட்டுப் பொருட்கள் வாங்குவதற்கு ரூ.2,00,000/- மற்றும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க ரூ.1,00,000/- செலவிடப்படுகிறது. இதற்காக மனமகிழ் மன்றங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும்

ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஈ) தமிழ்நாடு அரசினர் அச்சக மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்**

"A" வகையை சார்ந்த தமிழ்நாடு அரசினர் அச்சக மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் அரசு மைய அச்சகத்தில் இயங்கி வருகிறது. இக்கூட்டுறவு சங்கம் தொடங்கி 100 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது. இச்சங்கங்களில் உறுப்பினராக உள்ள இயற்கை எய்தும் சங்க உறுப்பினரின் ஈமச்சடங்கிற்காக குடும்பத்திற்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் “B” வகையை சார்ந்த தமிழ்நாடு அரசினர் அச்சக மற்றும் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் இதர 5 அரசு கிளை அச்சகங்களில் இயங்கி வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை ஊக்குவிக்கும் பொருட்டு தொடர் வைப்புத் திட்டம் மற்றும் கால வைப்புத் திட்டங்கள் இக்கூட்டுறவு சங்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சங்க உறுப்பினர்களுக்கு தகுதியின் அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) கடனாக அளிக்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு பயின்று மதிப்பெண்கள் தரவரிசைப்படி முதல் மூன்று இடங்களைப் பெறும்

சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**உ) கூட்டுறவு பண்டகசாலை**

1965-ஆம் ஆண்டு முதல் சென்னை, அரசு மைய அச்சக வளாகத்தில் தொழிலாளர்கள் / பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் நியாய விலையில் உணவுப் பொருட்களை பெற்று பயனடையும் வகையில் ஒரு கூட்டுறவு பண்டகசாலை சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

**ஊ) அரசு அச்சக பணியாளர் குடியிருப்பு**

சென்னை, தண்டையார்பேட்டையில் அரசு அச்சகப் பணியாளர்களுக்கென ரூ.39.30 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகள் புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 10. வரவு-செலவு

2026-2027-ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவு மற்றும் திருத்த வரவு-செலவு திட்ட மதிப்பீடு விவரம்:

| கணக்குத் தலைப்பு | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
|---|---|---|---|
| | | 2026-2027 ஆம் ஆண்டு இடைக்கால வரவு – செலவு திட்ட மதிப்பீடு | 2026-2027 ஆம் ஆண்டு வரவு-செலவு திருத்த திட்ட மதிப்பீடு |
| 2058 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 183,14,34 | 183,52,57 |
| 2059 | பொதுப் பணிகள் | 30,00 | 30,00 |
| 4058 | எழுது பொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 9 | 8 |
| **மொத்தம்** | | **183,44,43** | **183,82,65** |

## 11. கழித்தொதுக்கம்

2025-2026-ஆம் ஆண்டில் காகித கழிவுகளை மின்-ஏல முறையில் விற்பனை செய்ததில் அரசுக்கு ரூ.1,17,28,490/- (ரூபாய் ஒரு கோடியே பதினேழு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து நானூற்று தொண்ணூறு மட்டும்) வருவாயும், இயந்திர உதிரி பாகங்கள் மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட அலுமினிய அச்சுத் தகடுகளை கழித்தொதுக்கம் செய்ததில் அரசுக்கு ரூ.92,33,470/-(ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து நானூற்று எழுபது மட்டும்) வருவாயும் என கழித்தொதுக்கம் செய்த வகையில் மொத்தமாக ரூ.2,09,61,960/- (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 12. தகவல் பரவலாக்கம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கென பிரத்யேக இணைய வலைதளம் (https://www.stationeryprinting.tn.gov.in) வடிவமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதுடன், தமிழ்நாடு அரசிதழ்கள், அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவனச் சரிவு நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள், பொதுமக்கள் தங்களின் பெயரில் திருத்தம் செய்தல் மற்றும் மாற்றம் செய்தல் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள் ஆகியன அச்சிடப்பட்டு இவ்வலைதளத்தில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அன்று பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

பொதுமக்கள் தங்களின் பெயரினை திருத்தம் செய்யவோ அல்லது மாற்றம் செய்யவோ

தேவையான படிவங்களை இணைய வலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 13. நிறைவுரை

இன்றைய நவீன உலகில், அனைத்து துறைகளும் எண்ணிம (டிஜிட்டல்) மயமாக்கப்பட்டு வரும் நிலையில் அச்சுத்துறையின் தேவை நிகரற்றதாகவே விளங்கி வருகிறது. நவீன அச்சு இயந்திரங்கள் சத்தமில்லாத, தூய்மையான மற்றும் பாதுகாப்பான பணிச்சூழலை ஏற்படுத்தி அச்சுப்பணிகளை முன்னெடுத்துச் செல்கிறது. அரசிதழ்கள், சட்டமன்ற ஆவணங்கள், அரசு உத்தரவுகள், வாக்காளர் பட்டியல் படிவங்கள், தேர்வு விடைத்தாள்கள், கல்வி மற்றும் நிருவாக வெளியீடுகள் உள்ளிட்ட எண்ணற்ற அச்சுப்

பணிகள் அரசு அச்சகங்களில் துல்லியமாகவும், தரமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை 194 ஆண்டுகள் பழமையுடன், தொழில்நுட்ப வளர்ச்சியின் புதுமைகளை தனதாக்கி, இன்றைய எண்ணிம முறையிலான தொழில்நுட்ப வளர்ச்சியிலும் தன்னை மெருகேற்றி அரசுத் துறைகளின் அச்சுத் தேவைகளை விரைவாக, பொலிவுடன் செவ்வனே நிறைவேற்றி தனது பயணத்தை பெருமையுடன் தொடர்கிறது.

**ராஜ்மோகன்**
**பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி,**
**செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.**



மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் தலைமையில், 16.07.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை, செய்தி, மக்கள் தொடர்புத் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



சென்னை, அரசு மைய அச்சகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் 13.08.2026 அன்று Digital பிரிவில் ஆய்வு மேற்கொண்டார்.



சென்னை, அரசு மைய அச்சகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் 13.08.2026 அன்று Digital பிரிவில் ஆய்வு மேற்கொண்டார்.



சென்னை, அரசு மைய அச்சகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் 13.08.2026 அன்று Komori நான்கு வண்ண அச்சு இயந்திரப்பிரிவில் ஆய்வு மேற்கொண்டார்.



சென்னை, அரசு மைய அச்சகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் 13.08.2026 அன்று Computer–to–Plate பிரிவின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.